

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி சாலை கிராண்ட் ஹோட்டலில் நேற்று (29.12.2023) ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் ஜனவரி மாதம் நடைபெற உள்ள தென்னிந்திய அளவிலான ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கான பிரத்யேக கண்காட்சிக்கான ஆயத்த கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் விழிப்புணர்வு வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, தாட்கோ மாநில தூய்மை பணியாளர் நல வாரிய துணைத் தலைவர் கனிமொழி, மாநில திட்ட மேலாளர் வசந்தி குமரேசன் ஆகியோர் உள்ளனர்.


பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (29.12.2023) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க.

# விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக மாபெரும் கபடி போட்டி!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு தலைமையில்

விருதுநகர், டிச. 30 -

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி டிசம்பர் 30 மற்றும் 31 தேதிகளில் விருதுநகர் ராமமூர்த்தி ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி மைதானத்தில் நடைபெற இருக்கின்றது இந்த நிகழ்ச்சியில் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்) தங்கம் தென்னரசு (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்) தலைமையில் நடைபெறுகின்றது. விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.சீனிவாசன் முன்னிலை நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. ராஜகுரு, துணை அமைப்பாளர் எஸ். ஆர்.எஸ்.ஆர். மாதவன், (நகர் மன்ற தலைவர்) தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ரமேஷ், துணை அமைப்பாளர்கள் ஜி. வெயில்ராஜ், எம்.சரவணகுமார், ஆர்.கார்த்தி, பி.சுந்தரமூர்த்தி, எஸ் ராஜ்குமார், திருச்சுழி ஒன்றிய பெருந்தலைவர் எஸ். பொன்னுத்தம்பி, மாநில வர்த்தக அணி டி.வனராஜா சிவகாசி, மேயர் சங்கீதா, இன்பம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.கே.எஸ். எஸ்.வி.பி. சுப்பாராஜ், துணை மேயர் விக்னேஷ்பிரியா, காளிராஜன், ப.விருதுநகர் யூனியன் சேர்மன் சுமதி ராஜசேகர், விருதுநகர் நகர மன்ற துணைத் தலைவர் தனலட்சுமி, துளசிராமன், காரியாபட்டி ஒன்றிய சேர்மன் உ. முத்துலட்சுமி, சிவகாசி ஒன்றிய சேர்மன் முத்துலட்சுமி, விவேகன்ராஜன், காரியாபட்டி சேர்மன் ஆர்.கே. செந்தில், திருச்சுழி ஒன்றிய சேர்மன் காளீஸ்வரி சமயவேலு, சிவகாசி மாநகர் செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன், சிவகாசி தெற்கு ஒன்றியச் செயலாளர் விவேகன் ராஜ், சிவகாசி கிழக்கு ஒன்றியச் செய லாளர் ஆர். கோபி, கண்ணன், சிவகாசி வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ். தங்க ராஜா, விருதுநகர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆவுடையம்மாள், திருச்சியில் வடக்கு ஒன்றியச் செயலாளர் எம். சந்தான பாண்டியன், நரிக்குடி ஒன்றியச் செயலாளர் கண்ணன், காரியாபட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.கண்ணன், காரியாபட்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் எம்.செல்வம், வடக்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் போஸ் என்ற ஜெயச்சந்திரன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.ஏ.சந்திரன், எம்.மணிவாசகம், பி.செல்வம், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். கிருஷ்ணகுமார் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி. மதியழகன், ஆர். சுதாகர், எம்.ஆர்.ஜி. சிவசக்தி, எம்.சந்திரன், ஏ. கமலி பாரதி, ஆர்.பால்ராஜ், கே.வி.கந்தசாமி, ஜான் பாட்ஷா, வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி ஏ.எஸ். கே.ரமேஷ் குமார், நகர அவைத் தலைவர் ஸ்ரீராம் காசிராஜன், வடக்கு மாவட்ட விவசாய அணி நேஷனல், ராமர் வடக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி திருமாறன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சிக்கு நன்றியுரை நகர் கழகச் செயலாளர் எஸ்.ஆர். எஸ். தனபாலன் ஆற்றுகின்றார். இந்த நிகழ்ச்சியை விருதுநகர் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி செய்து வருகின்றனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் 3 உயர்நிலைப் பள்ளிகளில்

# ரூ.5 கோடியில் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 30 -

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஒன்றியம் அரளிக்கோட்டை, திருப்புவனம், இளையான்குடி ஒன்றியம் சாத்தனூர், ஆகிய அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் ரூபாய் 4 கோடியே 88 லட்சத்தி 70 ஆயிரம் மதிப்பில் கூடுதல் வகுப்பு கட்டிடங்கள் கட்டப்பட உள்ளது. இதற்கான கட்டிடப் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. கூடுதல் பள்ளி கட்டிட திட்டம் பணிகளை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது .

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அடிப்படையில் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் என்னற்ற பல்வேறு திட்டங் களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். பல்வேறு துறைகள் இதில் முன்னேறி வருகின்றது. இதில் கல்வி, சுகாதாரம் ஆகிய இரண்டு துறைகளை தனது இரு கண்களாக பாவித்து அதற்கான பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நாட்டின் எதிர்காலத்திற்காக தூண்களாக விளங்கக் கூடிய மாணவர்கள் பயன் பெறும் வகையில் அழியாச் செல்வமான கல்வி செல்வத்தினை அதிகம் பெற வேண்டும் என்ற உயர் நோக்கத்தில் தொலை நோக்கு சிந்தனையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து மாணவர் களை பயன்பெற செய்து வருகிறார்கள்.

போட்டி திறமைகள் நிறைந்த தற்பொழுது நவீன காலத்தில் அதற்கேற்ப மாணவ, மாணவிகள் தங்களது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தொலை நோக்கு சிந்தனை யுடன் கல்வியினை படிக்க வேண்டும். இதை மனதில் கொண்டு பெற்றோர்களுக்கு பொருளாதார ரீதியான சிரமங்களை கொடுக்காமல் முதல்வர் அவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழலில் அனைத்து பள்ளிகளையும் உருவாக்கி வருகிறார்கள்.

இதற்காக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தரும் வகையில் சிவகங்கை மாவட்டத்தில் கூடுதல் பள்ளி கட்டிடங்கள் கட்டுவதற்காக உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த பள்ளி கட்டிடங்களில் நல்ல வகுப்பறைகள், சமையலறைகள் கழிப்பறைகள், உட்பட அனைத்து வசதிகளும் செய்து தரப்பட உள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் 8 பள்ளிகளில் ரூபாய் 12 கோடி யே71 லட்சத்து 88ஆயிரம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்படவுள்ளது இதில் முதற்கட்டமாக சிங்கம்புணரி ஒன்றியம் அரளிக்கோட்டையில் ரூபாய் 82 லட்சத்து 72 மதிப்பீட்டில் நான்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும் திருப்புவனம் அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளியில் 2 கோடியே 97 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் 14 கூடுதல் வகுப்பு கட்டிங்களும் இளையாங்குடி ஒன்றியம் சாத்தனூரில் ரூபாய் ஒரு கோடியே5 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பீட்டில் 5 கூடுதல் வகுப்பறை கட்டிடங்களும் மொத்தம் 23 கூடுதல் பள்ளி கட்டிடங்கள் கட்டப்படவுள்ளது.

இதற்கான பணிகளை ஒப்பந்ததாரர்கள் நல்ல முறையில் கட்டி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாணவ - மாணவிகள் இந்த சூழலில் நன்றாக படித்து நாட்டின் நல்ல பொறுப்புள்ள அதிகாரிகளாக வரவேண்டும். என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

